1975 மார்ச் 20]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : கனம் உறுப்பினரைப் பொறுத்த வரை சிறு பிரச்சினை. வீட்டு வசதி வாரியத்திற்கு எவ்வளவு கட்ட வேண்டுமோ அதை முழுவதும் கட்டாமல் விட்டு விட்டார்கள். அதற்கு வட்டிபோட வேண்டுமென்று முறையில் அதையெல்லாம் சேர்த்துக் கட்ட வேண்டிய நிலை. வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்தவரை கணக்கு எல்லாம் அனுப்பச் சொல்லியிருக்கிறேன். கணக்கைப் பார்த்து முழுத் தொகையையும் செலுத்தி விட்டால் நிலம் உங்களுக்குச் சொந்தமாகிவிடும். எந்தப் பிரச்சினையும் அதிலே இல்லை.

திரு. நா. வீராசாமி : விவர அறிக்கையில், அறிஞர் அண்ணா நகரில் 314 வீடுகள் மிடில் இன்கம் குரூப்புக்காகக் கட்டித்தரப்பட இருக்கிறது என்று தரப்பட்டிருக்கிறது. அப்படிக் கட்டித்தரப்படுகிற வீடுகளுக்கு ஹவுசிங் போர்டு கொடுத்திருக்கிற 1—15 என்று தந்திருக்கிற பிளானில்தான் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று சொல்லுகிறார்கள். அந்த பிளானில்தான் கட்டிக் கொடுக்க முடியும் என்று வற்புறுத்துவது தவறு. தங்களுடைய விருப்பத்திற்கேற்றவாறு கட்டுவதற்கு..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதையெல்லாம் மாநிலத்தில் பேசுங்கள். இது சம்மந்தமாகக் கேள்வியை மட்டும் போடுங்கள்.

திரு. நா. வீராசாமி : அந்த வீடுகளைக் கட்டிக் கொடுக்கும்போது ஹவுசிங் போர்டு பிளான் அல்லாமல் அவரவர்கள் விருப்பத்தின்படி கட்டித்தர அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : நிலத்தை வாங்கி வீடு கட்டிக் கொள்பவர்கள் தங்கள் சொந்த விருப்பு வெறுப்புக்கேற்றபடி கட்டிக் கொள்ளலாம், எங்களைக் கட்டித் தரவேண்டுமென்று சொல்லுகிறவர்கள் கொடுக்கப்பட்டிருக்கும் பிளானில் எதையாவது ஒன்றின்படிதான் கட்ட முடியும். 20,000 வீடுகள், 30,000 வீடுகள் என்று மொத்தமாகக் கட்டும்பொழுது ஒவ்வொருவர் விருப்பப்படியும் கட்ட வேண்மென்றால்—ஒருவர் முற்றம் வேண்டுமென்பார் ; ஒருவர் போர்டிகோ வேண்டுமென்பார்—நடைமுறையில் முடியாது.

திரு. எம். ஏ. லத்தீப் : வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டுவதற்கு சில இடங்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். எந்த அடிப்படையில் அது தேர்ந்தெடுக்கப்படுகிறது? இரண்டாந்தர முனிசிபாலிட்டி பகுதிகளில்கூட, கிருஷ்ணகிரி முனிசிபாலிடி ஏரியாவைக்கூடத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஆனால் வாணியம்பாடியில், பெரு தொழிற்சாலை நகர், ஒரு வீடு கூடக் கட்டப்படவில்லை. அதுபற்றிக் கவனம் செலுத்தப்படாததற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : வேலூரில் வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன ; திருப்பத்தூரில் கட்டப்படுகின்றன. நடுவில் இருக்கும் வாணியம்பாடி லத்தீப் காரணமாக விடப்பட்டிருக்கிறதோ என்னவோ? நிலங்களை ஆர்ஜிதம் செய்யும்போது நகராட்சிகளும் மாநகராட்சிகளும்

நகரத்திற்கு வெளிப்புறத்தில் இருக்கும் குறைந்த விலை உள்ள நிலங்களை வாங்கிக் கொடுக்க வேண்டும். அந்த வகையில் வாணியம் பாடியில் நிலம் இருக்குமானால், தேவை இருக்குமானால் கட்டிக் கொடுக்கலாம். ஆனால் வாணியம்பாடியில் இருக்கக்கூடிய அதிபர்கள் சொந்தத்தில் பெரிய பெரிய வீடுகளை கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தேவை இல்லை என்ற நிலைமை இருக்கலாம். தேவை என்று சொன்னால் வீடுகளைக் கட்டி கொடுக்கத் தயாராக வாரியம் இருக்கிறது.

திரு. சு. துரைசாமி : கொடுக்கப்பட்டிருக்கும் விவர அறிக்கையில் 162, 163 வரிசையில் திருப்பூர், வேலம்பாளையத்தில் 25.59 லட்சம் செலவில் வீடுகள் கட்டத் திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பது 1973–74-ம் ஆண்டு. இரண்டு ஆண்டு காலம் முடிந்து விட்டது. வேலை இதுவரை துவங்கப்படவில்லை. விரைவாக வேலைகளைத் துவங்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : விரைவாக வேலைகள் நடை பெற நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. அ. பொம்மன் : அமைச்சர் கொடுத்த விவர அறிக்கை யில் நீலகிரி ஜில்லாவில் ஆறு காட்டேஜ் கட்டப்படுவதாகச் சொல்லப் பட்டிருக்கிறது. நீலகிரி டூரிஸ்ட் சென்டர், அங்கு இவ்வளவு குறைவாக இருப்பதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : நீலகிரி மாவட்டத்தில் இதுவரை வீடுகளை கட்டப்படாமல் இருந்தது. இப்போது என். ஜி. ஓக்களுக்கு வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. சுற்றுலா வாரியத்திற்காக உல்லாசக் குடில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. வீடுகள் கட்டாமல் நீலகிரி மாவட்டதைப் புறக்கணித்து விடவில்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், அமைச்சரவர்கள் சொல்லும்போது மாநிலத்திற்கு மத்திய அரசு பங்கு குறைவாகத்தான் தருகிறது என்று சொன்னார்கள். இப்போது நாம் ஒதுக்கக்கூடிய பணம் பூராவையும் செலவழித்து விடுகிறோம். உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கு ஒதுக்கப்படுகின்ற பணம் பூராவும் செலவழிக்கப்படவில்லை. ஆகையால் அப்படி செலவழிக்கப்படாமல் இருக்கிற பணத்தை முழுவதை யும் செலவழித்துவிடுகிற நம்முடைய மாநிலத்திற்கு கொடுக்கும்படி இந்த சர்க்கார் கேட்டிருக்கிறதா? அப்படியானால் அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, மத்திய அரசை நாம் பலமுறை கேட்டிருக்கிறோம். இருந்தபோதிலும் நம்முடைய கோரிக் கைக்கு முன்னுரிமை தரப்படவில்லை. ஆகையால் அந்த உதவியை அவர்கள் நமக்கு செய்யவில்லை. ரிசர்வ் பாங்க் மூலம் ஒரு உத்தரவு போட்டு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் உதவி செய்ய வேண்டு மென்று கேட்டபோது, ரிசர்வ் பாங்க் தன்னுடைய பதிலில் அப்படிப்பட்ட